**சமூக நல இயக்குநரக நிருவாக அலுவலர், சென்னை–15 அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.பெ.ஜெகதீஸ்வரன்**

404/17

(901)

**செ.மு.ந.க.எண் 22688/நிரு.4(1)/2017** **நாள்:-30.08.2017**

பொருள்:– பணியமைப்பு – சமூக நல இயக்குநரகம், சைதாப்பேட்டை, சென்னை15 – திரு.ப.பாலகிருஷ்ணன், தட்டச்சர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், திட்டம்–2, மதுரை மாவட்டம் என்பவருக்கு தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை பூர்த்தி செய்து ஆணையிடலாகிறது.

பார்வை:– 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அவர்களின் கடிதம் எண்.802/PSD-F/2013 நாள்:-19.03.2014.
2. சமூக நல ஆணையர், சென்னை–2 அவர்களின் செ.மு.ந.க.எண்.7929/நிர் 4(3)/2013 நாள்:-20.06.2014.
3.மாவட்ட திட்ட அலுவலர் (பொ), மதுரை மாவட்டம் அவர்களின் ந.க.எண் 2096/அ1/2017 நாள்:-18.07.2017.

........

ஆணை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மதுரை மாவட்டம், திட்டம்–2, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிபுரியும் திரு.ப.பாலகிருஷ்ணன் என்பவருக்கு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணித்தொகுதி பொது விதி எண் 23அ(1)ன்படி தட்டச்சர் பணியில் சேர்ந்த நாளான 26.06.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2007–2008 முதல் 2012–2013–க்கான தொகுதி–IV தேர்வு மூலம் நியமனம் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்கின் நீதிப்பேராணைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

திரு.ப.பால்கிருஷ்ணன், தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ந்து 3 ஆண்டு கால பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தினராக இருப்பார் எனவும் ஆணையிடலாகிறது.

இணைப்பு:- பணிப்பதிவேடு

ஒம்/–பெ.ஜெகதீஸ்வரன்
நிருவாக அலுவலர்

பெறுநர்
திரு.ப.பாலகிருஷ்ணன்,
தட்டச்சர்,
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம்,
திட்டம்–2,
மதுரை மாவட்டம் (அலுவலர் மூலமாக)

நகல்

1. மாவட்ட திட்ட அலுவலர், மதுரை மாவட்டம். (மேற்படி பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்).
2. குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர், திட்டம்–2, மதுரை மாவட்டம்.
3. இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி//

கண்காணிப்பாளர்

109

**சமூக நல ஆணையரக நிருவாக அலுவலர், சென்னை–15 அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.பெ.ஜெகதீஸ்வரன்**

**செ.மு.ந.க.எண் 700/நிரு.4(1)/2018** **நாள்:-21.03.2018**

பொருள் :– பணியமைப்பு – சமூக நல ஆணையரகம், சைதாப்பேட்டை, சென்னை 15 – திரு.ப.பாலகிருஷ்ணன், தட்டச்சர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், திட்டம்–2, மதுரை மாவட்டம் – தட்டச்சர் பதவியில் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை :–
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அவர்களின் கடிதம் எண்.802/PSD-F/2013 நாள்:-19.03.2014.
2. சமூக நல ஆணையர், சென்னை–2 அவர்களின் செ.மு.ந.க.எண் 7929/நிர் 4(3)/2013 நாள்:-20.06.2014.
3. சமூக நல இயக்குநரக நிருவாக அலுவலர், சென்னை–15 அவர்களின் செ.மு.ந.க.எண் 22688/நிரு.4(1)/2017 நாள்:-30.08.2017
4. மாவட்ட திட்ட அலுவலர், மதுரை மாவட்டம் அவர்களின் ந.க.எண் 6/அ1/2018 நாள்:-04.01.2018.

.........

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.ப.பாலகிருஷ்ணன், தட்டச்சர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், திட்டம்–2, மதுரை மாவட்டம் என்பவருக்கு பார்வை–3ல் காணும் செயல்முறை ஆணைப்படி தட்டச்சர் பதவியில் 26.06.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு 32ன்படி தனியர் துய்த்த விடுப்பு நீங்கலாக 15.09.2016 பிற்பகல் தட்டச்சர் பதவியில் தகுதிகாண்பருவகாலமான இரண்டாண்டுகள் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளார் என இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2007–2008 முதல் 2012–2013–க்கான தொகுதி–IV தேர்வு மூலம் நியமனம் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்கின் நீதிப்பேராணைக்குட்பட்டு தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு 30ன்படி தனியரின் இரண்டாவது ஊதிய உயர்வு கருத்தியலாக உரிய தேதியில் வழங்கி, அதன் பணப்பயன் தகுதிகாண்பருவம் நிறைவு செய்த அடுத்த நாளான 16.09.2016 முற்பகல் முதல் பெற தகுதியுடையவராவார் எனவும் இதன் மூலம் ஆணையிடலாகிறது.

இணைப்பு:- அசல் பணிப்பதிவேடு

ஒம்/–பெ.ஜெகதீஸ்வரன்
நிருவாக அலுவலர்

பெறுநர்
திரு.ப.பாலகிருஷ்ணன், தட்டச்சர்,
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், திட்டம்–2,
மதுரை மாவட்டம். (உரிய அலுவலர் மூலமாக)

நகல்
1. மாவட்ட திட்ட அலுவலர், மதுரை மாவட்டம். (மேற்படி பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)
2. குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர், திட்டம்–2, மதுரை மாவட்டம்.
3. இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி//

கண்காணிப்பாளர். 22/3/18